87



# மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி மன்றத் தலைவரின் செயல்முறை ஆணைகள்

## முன்னிலை : திருமதி. ம. பூங்கோதை

ந.க. எண் : **2** / 2023-24 நாள்: 27-12-2023

பொருள் :- குடியிருப்பு மனைப்பிரிவு - மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் - **செட்டிகுளம் ஊராட்சி** - செட்டிகுளம் கிராமம் சர்வே எண்கள் **15/68** -ல் **0.70**-ஏக்கர் **2832.80** ச.மீ பரப்பளவு கொண்ட உத்தேச மனைப் பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது - மனை பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

| | | |
|---|---|---|
| பார்வை:- | 1 | மனுதாரர் திரு.M.பாலசுப்ரமணியன் & M.ஜெகநாதன் மனு நாள்- 22.12.2023 |
| | 2 | அரசாணை (நிலை) எண்: 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, நாள் : 18.08.1997 |
| | 3 | அரசாணை எண்: 02, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(நிபமா))த் துறை, நாள் : 04.01.2021 |
| | 4 | அரசாணை (2ப) எண்:115 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(நிபமா))த் துறை, நாள் : 25.04.2022 |
| | 5 | அரசாணை (நிலை) எண்: 78மற்றும்79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் : 04.05.2017 |
| | 6 | அரசாணை (நிலை) எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை, நாள் : 04.02.2019 |
| | 7 | அரசாணை (நிலை) எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் : 09.12.2020 |
| | 8 | அரசாணை (நிலை) எண்: 26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை (SGS-3), நாள் : 18.02.2015 |
| | 9 | மதுரை உள்ளூர் திட்ட குழும உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் ந.க.எண் 16397/2023 TCP நாள்:11.12.2023 |
| | 10 | மனுதாரர் திரு.M.பாலசுப்பிரமணியன் & M.ஜெகநாதன் அவர்களிடம் இருந்து உள்ளாட்சி தானமாக பெறப்பட்ட அசல் பத்திரம் எண் 7511/2023 நாள்:29.11.2023 மற்றும் TANGEDCOக்கு தானமாக பெறப்பட்ட அசல் பத்திரம் எண் 7510/2023 நாள்:29.11.2023 |
| | 11 | மனுதாரர் திரு.M.பாலசுப்பிரமணியன் & M.ஜெகநாதன் வளர்ச்சி கட்டணம் செலுத்தியதற்கான வங்கி வரைவோலை மற்றும் ரசீது |

89

4 இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

5 நகர் ஊரமைப்புத்துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறையோ ஊராட்சி ஒன்றியமோ, ஊராட்சியோ பொறுத்தமான அமைப்பு அல்ல.

6 சாலையில் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒன்றாக நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

7 அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவில் உள்ள மனைகளுக்கு மட்டுமே பொருந்தும் மனையில் அமையும் கட்டிடங்கள் வரன்முறைபடுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது.

8 மனைபிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை இருந்தால் சாலையின் ஓரமாக மாற்றி அமைக்க வேண்டும்.

9 உள்ளாட்சி அமைப்புக்கு **21.03 ச.மீ** தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்ட இடத்தில் சுற்றி முள் வேலி அமைத்து உள்ளாட்சி அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட இடம் என தகவல் பலகை அமைக்க வேண்டும்.

10 மனைப்பிரிவின் ஊடே நீர் பாசன வாய்க்கால் இருந்தால் எந்த விதமான ஆக்கிரமிப்போ மனையில் கட்டப்பட உள்ள வீடுகளின் கழிவுநீரோ விடக்கூடாது.

11 இம் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலையின் இறுதி வால்பகுதியை **(Road Tail End)** எக்காரணம் கொண்டும் தற்காலிகமாவோ அல்லது நிரந்தரமாகவோ அடைப்பு/தடுப்பு ஏற்படுத்தக்கூடாது.

12 மேற்காணும் விதிமுறைகள் ஏதும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு வரைபடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி செட்டிகுளம் ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

<u>அங்கீகரிக்கப்படும் மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | உத்தேச மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | : | 2832.00 ச.மீ |
| 2 | உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு | : | 768.01 ச.மீ |
| 3 | உள்ளாட்சி அமைப்புக்கான ஒதுக்கீடு | : | 21.03 ச.மீ |
| 4 | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீடு | : | 19.42 ச.மீ |
| 5 | மொத்த மனைகளின் எண்ணிக்கை **(1 முதல் 15)** | : | **1 முதல் 15** |

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மதுரை உள்ளூர் திட்ட குழும பகுதி, மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி கொடிமங்கலம் கிராமம் சர்வே எண்கள்: **15/68** -ல் **0.70**-ஏக்கர் 2832.80 ச.மீ பரப்பளவு கொண்ட (**1** முதல் **15**) **15** எண்ணிக்கையிலான மனைகள் கொண்ட திட்ட அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ம.பூங்கோதை

தலைவர் / செயல் அலுவலர்
செட்டிகுளம் ஊராட்சி
மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு:

1.அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்-1

பெறுநர்:

M.பாலசுப்பிரமணியன் & M.ஜெகநாதன்
2/97 மேலத்தெரு
திருப்பாலை
மதுரை-14.

நகல்:

1 உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்
மதுரை உள்ளூர் திட்ட குழுமம், மதுரை
2 ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
மதுரை.
3 சார்பதிவாளர், பதிவுத்துறை
தல்லாகுளம் அலுவலகம்,மதுரை.
4 TANGEDCO மதுரை